படிவம் : **(இலக்கம் 01)**

பாராளுமன்ற கூட்டத்தொடர் இலக்கம் : **290**

நிறுவனத்தின் பெயர் : அமைச்சரவை அலுவலகம்

அரசாங்க கணக்குகள் குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள்	**குறைபாடுகளை தவிர்ப்பதற்கு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலைமை**
பொருட் கணக்கெடுப்பு பூர்த்தி செய்யப்பட்டு உரிய திகதியில் அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை.	2021 ஆம் ஆண்டிற்குரிய பொருட் கணக்கெடுப்பை நடாத்துவதற்கு 2021-11-25 ஆம் திகதி உரிய முறையில் பொருட் கணக்கெடுப்பு குழு நியமிக்கப்பட்டது. 2021-12-31 ஆம் திகதிவரை குடியரசு கட்டடத்தில் தாபிக்கப்பட்டிருந்த அமைச்சரவை அலுவலகம் 2022-01-03 ஆம் திகதி தொடக்கம் லொயிட்ஸ் கட்டடத்திற்கு மாற்றப்பட்டது. அங்கு அலுவலக நடவடிக்கைகளையும் ஒவ்வொரு பிரிவுகளையும் மீளமைக்கும் போது குறித்த பிரிவுகளுக்குரிய பொருட் பதிவேட்டு புத்தகங்களை மீண்டும் இற்றைப்படுத்தப்படுத்த நேரிட்டது. அதனால் பொருட் கணக்கெடுப்பு நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதில் கால தாமதம் ஏற்பட்டதுடன் 2022-10-27 ஆம் திகதி ஆகும்போது பொருள் அகற்றுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உரிய அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
சகல வாகனங்களிலும் அரச இலட்சினை பொறிக்கப்பட்டிருக்காமை..	தற்போது சகல வாகனங்கள் முன்னாலும் தெளிவாக தென்படக்கூடிய வகையில் அரச இலட்சனையுடன் நிறுவனத்தின் பெயர் மூன்று மொழிகளிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. (26/92 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் படி சகல வாகனங்களிலும் அரச இலட்சினை பொறிக்கப்படுதல் அவசியமற்றது.)
வங்கி இணக்கக் கூற்று அறிக்கையில் வெளிப்பட்ட சரி செய்ய வேண்டிய நிலுவைகள் தீர்க்கப்பட்டிருக்காமை.	செல்லுபடியாகும் கால எல்லையை நீடித்திருப்பினும் Abans Electronics PLC நிறுவனம் காசோலையினை வங்கிக்கு சமர்ப்பிக்காமையினால் 2021-12-31 ஆம் திகதியாகும் போது காசோலை இரத்து செய்யப்படவில்லை. பின்னர், காசோலை இரத்து செய்யப்பட்டு பொது வைப்பு கணக்கில் வரவு வைக்கப்பட்டதுடன் 2022-03-21 ஆம் திகதி குறித்த நிறுவனத்தினால் காசோலை கொண்டு செல்லப்பட்டு வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது.
உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்	அமைச்சரவை அலுவலகத்தின் 2021-12-31 ஆம் திகதி

திட்டயொன்று தயாரிக்கப்பட்டிருக்காமையும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத் தொடர்கள் நடாத்தப்பட்டிருக்காமை.	வரை குடியரசு கட்டடத்தில் அமைந்திருந்த அமைச்சரவை அலுவலகத்தில் மட்டுப்படுத்தப்பட்ட இட அளவே காணப்பட்டது. அதனால், உள்ளக கணக்காய்வு அலுவலர் ஒருவரை இணைத்துக் கொண்டதன் பின்னர் குறித்த அலுவலருக்கு போதுமானளவு அலுவலக இடவசதியினையும் கணக்காய்வு பணியாட்டொகுதியினருக்கான இடவசதியினையும் வழங்குவதில் சிக்கல்கள் நிலை காணப்பட்டது. தற்போது அமைச்சரவை அலுவலகம் கொழும்பு - 01 இல் ஸ்ரீமத் பரோன் ஜயதிலக்க மாவத்தையில் 'லொயிட்ஸ்' கட்டடத்தில் தாபிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த வெற்றிடத்தை நிரப்பி உரிய முறையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
நிறுவனத்தின் இணையத் தளத்தின் ஊடாக பொது மக்களின் முறைப்பாடுகள் / பாராட்டுதல்களை குறிப்பிடு வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட் டிருக்காமை.	தற்போது அமைச்சரவை அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் முதலாம் பக்கத்தில் பொதுமக்களுக்கு தங்களது கருத்துக்களை குறிப்பிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. முன்னர் காணப்பட்ட நிலைமையை விட முறையாகவும் பாதுகாப்பான முறைமையொன்றிகமைய தங்களது முறைபாடுகளை அல்லது பாராட்டுதல்களை குறிப்பிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதுடன் இது குறித்து அடிக்கடி மீளாய்வு செய்யப்படுகின்றது.
மனிதவளங்கள் அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காமை, தயாரிக்கப்பட்டுள்ள மனிதவள அபிவிருத்தி திட்டத்தின் ஊடாக பணியாட்டொகுதியினரில் 50% தை விட அதிகமானவர்களுக்கு ஒருவடத்திற்கு ஆகக்குறைந்தது 12 மணித்தியாலயத்திற்கு குறையாத பயிற்சி சந்தர்ப்பமொன்று உறுதிப்படுத்தப்பட்டிருக்காமை திட்டமிடப்பட்டிருந்த பயிற்சி சந்தர்ப்பங்களில் அளவில் 50% தை விட குறைவான மட்டத்தில் இருந்தமை	2021 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய COVID தொற்று நிலைமை காரணமாக 20/2020 ஆம் இலக்கத்தைக் கொண்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவாக அரச ஊழியர்களை அலுவலகத்திற்கு சமூகமளிப்பது கட்டுப்படுத்தியமை காரணாக அத்தியாவசிய கடமைகளை நிறைவேற்றுவதற்கு மாத்திரம் போதுமான மட்டுப்படுத்தப்பட்ட ஊழியர்களை மாத்திரம் அலுவலகத்திற்கு வரவழைக்கப்பட்டனர். அதன் காரணமாக சகல ஊழியர்களும் உள்ளடங்கிய விதத்தில் 02/2018 ஆம் இலக்கத்தைக் கொண்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவாக மனிதவளங்கள் அபிவிருத்தி திட்டமொன்றை தயாரிக்க முடியாத நிலை காணப்பட்டது. தற்போது அலுவலகத்தில் பயிற்சி பெறவேண்டிய சகல உத்தியோகத்தர்களுக்கும் 12 மணித்தியாலங் கள் வருடாந்த பயிற்சி சந்தர்ப்பங்கள் உறுதி

	செய்யப்படும் வகையில் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் கடந்த வருடத்தினுள் வழங்கப்பட்ட பயிற்சிகளை பெற்றுள்ள மொத்த உத்தியோகத்தர்களில் 50% இனை தாண்டியுள்ளது.
சகல உத்தியோகத்தர்களும் உள்ளடக்கிய விதத்தில் செயலாற்றுகை ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டிருக்காமை.	02/2018 ஆம் இலக்கத்தைக் கொண்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் தற்போது இந்த நிறுவனத்தில் சகல ஊழியர்களும் உள்ளடங்கும் விதத்தில் செயலாற்றுகை ஒப்பந்தங்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
மனிதவளங்கள் அபிவிருத்தி திட்டத்தை தயாரிக்கும் போது கொள்ளளவு மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவற்கு நிறுவனத்தில் சிரேட்ட உத்தியோகத்தரொருவர் பெயர்குறித்து நியமிக்கப் பட்டிருக்காமை	மனிதவள அபிவித்தி திட்டத்தை தயாரிப்பதும் கொள்ளளவு மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்து தொடர்பில் 02/2018 ஆம் இலக்கத்தை கொண்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் 6.5 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு நிறுவனத்தினுள் சிரேட்ட உத்தியோகத்தர் ஒருவரை பெயர்குறித்து நியமித்து அது தொடர்பில் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் மனிதவள அபிவிருத்தி பிரிவிற்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
அடையாளங் காணப்பட்ட நிலைபேறுடைய நோக்கங்களை அடைந்து கொண்டுள்ளமை பற்றி அளவீடு செய்வதற்கு செயலாற்றுகை குறிக்கோள்கள் குறிப்பிடப்பட்டிருக்காமை அடையாளங் காணப்பட்ட குறிக்கோல்களை நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றத்தை அளவிடுவதற்காக குறிகாட்டிகள் குறிக்கப்பட்டிருக்காமை..	அமைச்சரவைக்கு கையளிக்கப்பட்டுள்ள கடமைகளை கவனத்திற்கொள்ளும்போது, நிலைபேறுடைய அபிவிருத்தி இலக்குகளை இவ்வலுவலகத்தின் பணிகளுடனும் நேரடியாக தொடர்புபடுத்த முடியாது. அரச நடவடிக்கைகளில் நிர்வாகம் மற்றும் செயற்பாடுகளுக்கான சகல கொள்கை ரீதியிலான தீர்மானங்களை எடுப்பதற்குத் தேவையான ஒத்துழைப்பினை நல்குவது இவ்வலுவலகத்தின் ஊடாக இடம்பெறுவதால் பல்வேறு அமைச்சுக்களினால் கொள்கை ரீதியிலான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனங்களை சமர்ப்பிக்கும் போது அவ்விஞ்ஞாபனங்களின் உள்ளடக்கங்கள் நிலைபேறுடைய அபிவிருத்தி நோக்கங்களுடன் உடன்படுகின்றதா என்பது பற்றி ஆராய்ந்து அது தொடர்பில் தேவையான சந்தர்ப்பங்களில் தெளிவுபடுத்தப்படுகின்றன.
உச்சபட்ச சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களுக்கு உரிய முறையில் இடமாற்றம் வழங்கி அவர்களை அனுப்புவதற்கு	இந்த அலுவலகமானது ஏனைய சாதாரணமான அலுவலகங்கள் போன்று வருடாந்த இடமாற்றம் நடைமுறைப்படுத்தப்படாத ஓர் அலுவலகமாகும். அதேபோன்று இவ்வலுவலகத்தில் பணிகளின் தன்மைக்கு அமைய வழமையான கடமைகளின்

நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை.	பின்னரும், கிழமை நாட்களிலும் மற்றும் விடுமுறை நாட்களிலும் கூட கடமையாற்றுவதற்கு இயலுமான உத்தியோகத்தர்களை விசேடமாக அடையாளம் கண்டு அவர்களின் பாதுகாப்பு உடன்பாட்டு அறிக்கையையும் மீளாய்வு செய்ததன் பின்னரே இந்த அலுவலகத்திற்கு இடமாற்றத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அவ்வாறான உத்தியோகத்தர்களை அடையாளம் காண்பது மிகவும் கடினமான பணியாவதுடன் அவ்வாறு அடையாளம் காணப்படும் உத்தியோகத்தர்களை நீண்ட காலத்திற்கு இந்த அலுவலகத்தில் சேவையாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறாயின் அமைச்சரவை அலுவலகத்தின் கடமைகள் தொடர்பில் அனுபவமும் வினைத்திறனுடனுமான உத்தியோகத்தர்களை அடிக்கடி இடமாற்றுவது இந்த அலுவலகத்தின் செயலாற்றுகை சம்பந்தமாக பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தும். அவ்வாறாயினும் உத்தியோகத்தர்களின் வேண்டுகோள்கள் மற்றும் மனிதாபிமான காரணங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தேவையான உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஒப்பம்./ டபிள்யு.எம்.டி.ஜே.பெர்னாண்டோ,
அமைச்சரவைச் செயலாளர்
2024.01. 23

W. M. D. J. FERNANDO
Secretary to the Cabinet of Ministers
Office of the Cabinet of Ministers
Lloyd's Building
Sir Baron Jayathilaka Mawatha
Colombo 01.